சிறப்பு மாவட்ட நீதிமன்றம்,

மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு கோருரிமை தீர்ப்பாயம், தஞ்சாவூர்.

முன்னிலை : திரு. மு. வடிவேல், பி.காம்.,பி,எல்.,

சிறப்பு மாவட்ட நீதிபதி/மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு

கோருரிமை தீர்ப்பாயத்தார், தஞ்சாவூர்.

2024 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 05 ஆம் நாள் புதன்கிழமை

மோ.வா.வி.இ.கோ.அ.மனு எண்.132/2023

CNR No.TNTJ070000752023

1. ரமணி
2. இளவர் ஜனனி
3. இளவர் பிரியதர்ஷினி

2,3 இளவர் மனுதாரர்களுக்கு காப்பாளர் மற்றும் தாயார் ரமணி

4. அம்சவள்ளி ... மனுதாரர்கள்

எதிர்

1. சுதா
2. மேலாளர்,
HDFC Ergo ஜெனரல் கம்பெனி லிமிடெட்.,
திருச்சி. ... எதிர்மனுதாரர்கள்

இந்த மனுவின் மனுதாரர்கள் சார்பில் வழக்கறிஞர் திரு.N.இளம்பரிதி அவர்களும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.ரவீந்திரன் அவர்களும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.கிருஷ்ணசாமி அவர்களும், மனுதாரர்கள் ஆஜரில்லாத காரணத்தினாலும் அவர்கள் தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாத நிலையில் ஆவணங்கள் பார்வையிட்டதன் அடிப்படையில் இந்நீதிமன்றம் இன்று பிறப்பிக்கும்.

## ஆணையுரை

1. கடந்த 29.10.2022 ஆம் தேதி நடந்த சாலை விபத்தில் செந்தில்முருகன் என்பவர் இறந்ததற்காக இழப்பீட்டு தொகையாக

ரூ.75,00,000/—த்தை (ரூபாய் எழுபத்தைந்து இலட்சத்தை) எதிர்மனுதாரர்கள் செலுத்திட உத்தரவிட வேண்டுமென கோரி மோட்டார் வாகன சட்டம் பிரிவு 166 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்த மனுவில் 1,2 ம் எதிர்மனுதாரர்கள் எதிர்உரை தாக்கல் செய்துள்ளார்கள்.

3. இம்மனுவானது மனுதாரர்கள் தரப்பு விசாரணைக்காக இருந்து வருகிறது. இன்று இம்மனு விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்களை அழைத்தபோது மனுதாரர்கள் ஆஜரில்லை. அதனால் இந்த மனுவை மனுதாரர்களின் தவறுகையின் காரணமாக தள்ளுபடி செய்ய இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவில் மனுதாரர்கள் ஆஜரில்லாத காரணத்தினால் மனுதாரர்களின் தவறுகையின் காரணமாக இந்த மனுவை செலவுத் தொகை எதுவும் இன்றி தள்ளுபடி செய்து இந்த தீர்ப்பாயம் உத்தரவிடுகின்றது.

இந்த உத்தரவானது நேரடியாக தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் என் முன்பாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு பின்னர் அச்சு எடுக்கப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 05 ஆம் நாளாகிய இன்று திறந்த அவையில் பகரப்பட்டது.

M VADIVEL
Digitally signed by M VADIVEL
Date: 2024.06.06 10:03:40 +0530

சிறப்பு மாவட்ட நீதிபதி / மோட்டார்
வாகன தீர்ப்பாயத்தார், தஞ்சாவூர்.